பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

06 09 2025   SATURDAY  7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 94 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

2. ஜம்மு கஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் ஆய்வு செய்துள்ளனர்.

3. நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 694 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

4. தாய்லாந்து நாட்டின் புதிய பிரதமராக திரு. Anutin Charnvirakul தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

5. உலக வில்வித்தை சாம்பியன் போட்டி தென்கொரியாவில் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 94 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின், இரண்டாவது கட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ், மீதமுள்ள வீடுகள் விரைவாக கட்டி முடிக்கப்படும் என்றும் அனைவருக்கும் வீடு என்ற குறிக்கோளுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த வருமானப் பிரிவினருக்கு வீட்டுவசதி கடன்களுக்கு அரசு ஏற்பாடு செய்து தருவதாகவும் திரு. மனோகர் லால் கூறினார்.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் ஆய்வு செய்துள்ளனர்.

பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று, உதம்பூர், Reasi மாவட்டங்களில் நிலச்சரிவு மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த, முன்னுரிமை அளிக்குமாறு யூனியன் பிரதேச நிர்வாகத்தை அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இயற்கை சீற்றங்களின் போது எந்தவொரு நிலைமையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க, பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அரசு நிர்வாகத்தை கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய விமானப் படையினர் ஹெலிகாப்டர் மூலமாக 6 டன் உணவுப் பொருட்களை கொண்டு சென்று, பொதுமக்களுக்கு வழங்கியுள்ளனர்.

இதற்கிடையே, பஞ்சாப் மற்றும் தில்லியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு மருத்துவ உதவி வழங்க எய்ம்ஸ் மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மற்றும் ஹிமாச்சலப்பிரதேச மாநிலங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாநில அரசுக்கு உதவுவதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இதனை தெரிவித்த அவர், இயற்கை பேரிடர் காரணமாக, செல்ல முடியாத தொலைதூர கிராமங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் சென்றடைவதை இவர்கள் உறுதிப்படுத்துவார்கள் என்று கூறினார்.

இதற்காக, தேசிய பேரிடர் மீட்புப் படையின் சார்பில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட எனது இளைய பாரதம் என்ற வலைதளத்தில், நாடு முழுவதும் ஒரு கோடியே 70 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் பதிவு செய்துள்ளதாகவும், இயற்கை சீற்றங்களின் போது, நிவாரணம் மற்றும் மீட்பு பணிகளுக்கு இவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

சாலை பாதுகாப்பு, வாக்காளர் விழிப்புணர்வு, சுற்றுச் சூழல் பராமரிப்பு ஆகியவை தொடர்பாக மக்களிடையே இவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>><<<<<

தொழில்துறையில் அடுத்த புரட்சி, உயிரி தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

Roorkee IIT-யில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், உயிரி தொழில்நுட்பம், விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகி வருவதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் உள்ள ஒரு லட்சத்து 70 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள், நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 694 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் 29ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 3 புள்ளி ஐந்து ஒன்று பில்லியன் டாலர்கள் அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் அந்நியச் செலாவணி சொத்துக்கள் ஒன்று புள்ளி ஆறு ஒன்பது டாலர் அதிகரித்து, 583 புள்ளி ஒன்பது பில்லியன் டாலரை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஜமைக்கா பொதுத்தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளதை அடுத்து. அதன் தலைவரும். பிரதமருமான டாக்டர் Andrew Holness-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியா – ஜமைக்கா இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த அவருடன் இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் காத்திருப்பதாகவும், சமூகவலைதளப் பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

பழங்குடியினருக்கு அதிகாரமளிக்க வகை செய்யும் ஆதி கர்மயோகி அபியான் திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பழங்குடியின மக்களுக்கு 3 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

பழங்குடியின மக்களுக்கு மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து இந்தப் பயிற்சி முகாமில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாக முகாமில் கலந்து கொண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – அதிகாரி 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே, சிறப்பான உறவு இருப்பதாகவும், வர்த்தக பிரச்சினையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து, அச்சப்பட ஒன்றுமில்லை என்றும் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மிகச் சிறந்த நண்பர் என்றும், தொடர்ந்து இந்தியாவுடன் அமெரிக்கா சுமுகமான உறவுகளை பராமரிக்கும் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும், ரஷ்யாவிடமிருந்து அதிக அளவில், கச்சா எண்ணெயை இந்தியா வாங்குவது தமக்கு ஏமாற்றமளிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுடன் வர்த்தக பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறினார்.

>>>>><<<<<

தாய்லாந்து நாட்டின் புதிய பிரதமராக தொழிலதிபர் திரு. Anutin Charnvirakul தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டாண்டுகளில் அந்நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள மூன்றாவது பிரதமர் இவர் ஆவார்.

கம்போடியாவுடன் நடைபெற்ற எல்லைப் பிரச்சினையை சமாளிக்க தவறியதற்காக, ஏற்கனவே இருந்த திருமதி. Shinawatra-வை பதவியிலிருந்து அந்நாட்டு நீதிமன்றம் நீக்கியது.

இதையடுத்து. புதிய பிரதமராக திரு. Anutin Charnvirakul தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தின் கீழவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், அவருக்கு 247 வாக்குகள் கிடைத்தன.

>>>>><<<<<

உலக வில்வித்தை சாம்பியன் போட்டி தென்கொரியாவில் இன்று தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் 12 பேர் கொண்ட இந்திய அணியினர் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் தீபிகா குமாரி, அங்கிரா பஹத்-ம், ஆடவர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா, நீரஜ் சவுஹான் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

பீகார் மாநிலம், ராஜ்கிரில் இந்த ஆட்டம் இரவு மணி 7.30-க்கு தொடங்கவுள்ளது.

முன்னதாக, மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் கொரியா - மலேசியாவை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

கிராண்ட் சுவிஸ் செஸ் போட்டியில், உலக சாம்பியன் இந்தியாவின் குகேஷ், இரண்டாவது சுற்றில் துருக்கியின் Yagiz Kaan-னுடன் டிரா செய்தார்.

மகளிர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் வைசாலி – நெதர்லாந்தின் Eline Roebers-ஐ வென்றார்.

ஆடவர் பிரிவு இரண்டாவது சுற்றில் பிரக்ஞானந்தா, ரஷ்யாவின் Ivan-ஐ வென்றார்.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 48-28 என்ற புள்ளிக்கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஹரியானா 37-32 என்ற புள்ளிக்கணக்கில் உத்தரபிரதேச அணியை வென்றது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - பாட்னா அணியையும், இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி - குஜராத் அணியையும் எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<